Chundikuli ...

# பலாலி முகாமிலிருந்து அகோரஷெல்; சிறுமி பலி

## 12 பேர் படுகாயம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 31 இதழ் 211
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 16 - 9 - 1993

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை 6 மணி முதல் இரவு 8 30 மணிவரை ஊரெழு தெற்கு உடுவில் கிழக்கு சுன்னாகம் மேற்குபகுதி நோக்கி மேற்கொள்ளப்பட்ட அகோர ஷெல் தாக்குதலினால் ஊரெழு தெற்கில் சிறுமி ஒருவர் பலியானார்.

இப்பகுதியில் அடுத்தடுத்து வீழ்ந்த ஷெல்லினால் லோகராசா தர்மினி (வயது 12) பலி

(6-ம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம் நோக்கி ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்
தெல்லிப்பளை இராணுவ முகாமில் இருந்து நேற்றுமாலை 6 மணிக்கு சுன்னாகம் மயிலணி பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் ஒருவர் படுகாயமடைந்தார். ஒரு வீடு சேதமடைந்தது ஆலயமொன்றின் முற்பகுதியும் சேதமடைந்தது.

மயிலணி வடக்கு அம்மன் ஆலயத்தின் முன்பக்கத்தில் விழுந்த ஷெல்லினாலேயே ஆலயத்தின் முன்னால் இருந்த மயிலணி வடக்கை சேர்ந்த

6-ஆம் பக்கம் பார்க்க

## ● புதிய மாற்றங்களின் பின்

# வடகிழக்குபடை முகாம்களுக்கு

# ராணுவ தளபதி அவசர விஜயம்

## தாக்குதலுக்கு திட்டமா?

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ள பல முக்கிய படை முகாம்களுக்கு இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன கடந்த சில தினங்களுக்கு முன் அவசர விஜயமொன்றை மேற்கொண்டு பாதுகாப்பு நிலைமைகளை நேரில் அவதானித்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

கூட்டுப் படைத் தலைமை ணுவ தளபதி வடக்கு கிழக்கு கருதப்படுகிறது.
பகம் கலைக்கப்பட்டு 'பாது பகுதியில் பல படைமுகாம் களில் வைத்தியரத்ன இரு
காப்பு ஒருங்கிணைப்பு குழு' களுக்கும் நேரில் சென்றமை பகுதிகளுக்குமான விஜயத்
அமைக்கப்பட்ட பின் இரா ஒரு முக்கிய விடயமாகவே

(6-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பைப் பலப்படுத்தியபின்

## வடக்கே பாரிய தாக்குதல்?

(கொழும்பு)
கொழும்பில் புலிகள் பெருமளவில் ஊடுருவியுள்ளதாகக் கூறி வரும் அரசு, கொழும்பின் பாதுகாப்பைப் பலமடங்கு அதிகரித்த பின்னர் வடக்கில் பாரிய தாக்குதல் ஆரம்பிக்கலாமென அவதானிகள் கருதுவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கில் பாரிய தாக்குதலை ஆரம்பித்தால், கொழும்பில் புலிகள் பெருமெடுப்பில் தாக்குவார்கள் எனப் புலனாய்வுத் துறையினர் எச்சரித்திருந்தனர். இதையடுத்தே கொழும்பிலும், அதன் சுற்றுப்புறமி

(6-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதல் மையம்

## கொழும்புக்கு நகர்கிறதா?

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் தாக்குதல் மையம் கொழும்புக்கு நகர்ந்து வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக் காலமாகக் கொழும்பு நகருக்குள் புலிகளின் ஊடுருவல் பெருமளவில் அதிகரித்திருப்பதால், கொழும்பில் பல இடங்களையும் தாக்கக்கூடும் என்ற ஒரு நிலைமை உள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

இதனைத் தடுக்கும் நோக்கில், கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் பெருமளவில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. கட்டுநாயக்கா முதல் கொழும்பு

(6-ஆம் பக்கம் பார்க்க)

## குப்பைக்குள்ளிருந்து

## குண்டு வெடித்தது

### இளைஞர் படுகாயம்

(பருத்தித்துறை)
தோட்டக் காணியைத் துப்புரவுசெய்து குப்பையை எரித்துக்கொண்டிருந்தபோது குப்பைக்குள் இருந்த குண்டொன்றுவெடித்ததனால் மயிரிழையில் உயிர்தப்பிய இளைஞரொருவர் கையில் பலத்த காயங்களுக்குள்ளானார்.

புலோலி வல்லிபுரப் பகுதியைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் ரகுநாதன் (வயது 23 என்பவரே இவ்விபத்திற்குள்ளானவராவார். இவ்விளைஞர் உடனடியாக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப் பட்டார். (52-தி)

## மண்டைதீவிலிருந்து

## கலிபர், ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுமாலை 5.50 மணிக்கு கொட்டடி பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலும் கலிபர் தாக்குதலும்மேற்கொள்ளப்பட்டது.

கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலைக்கு அண்மையில் குடியிருப்புப் பகுதியில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்ததினால் சில வீடுகளை சேதமடைந்தன. எனினும் இத்தாக்குதலினால் எவரும் காயமடையவில்லை

(சு-157-இ)

## 3 பீரங்கிப் படகுகள்

## முல்லைத்தீவில் தாக்குதல்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு அலம்பில் கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த கடற்படையின் 3 பீரங்கி படகுகள் நேற்றுமுன்தினம் நண்பகலளவில் மக்கள் குடியிருப்புகள் மீது பலத்த பீரங்கி தாக்

(6-ம் பக்கம் பார்க்க)

## களனிப் பல்கலைக்கழக

## மாணவர் கடத்தப்பட்டனர்!

(கொழும்பு)
களனிப் பல்கலைக்கழகம் சம்பந்தமாக சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த செய்தி ஒன்றுக்கு பின்பு, பல்கலைக்கழகத்துக்கு வரும் மாணவர் வரவு 50 வீதமாகக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப் படுகிறது.

அந்த பத்திரிகையில், பல்கலைக்கழகத்தில் இருந்துமாண

6 ஆம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவு தினம்

## நேற்று ஆரம்பமானது

(யாழ்ப்பாணம்)
தியாகி திலீபனின் 6வது ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள் தமிழீழத்திலும், உலக நாடுகளில் தமிழர் வாழும் பகுதிகளிலும் நேற்று ஆரம்பித்தன.

நேற்று முதல் தியாகி திலீபன் ஈகைச் சாவடைந்த 26ம

(6-ம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேச்சுக்கு

## ஐ.நா. தரப்பில் முயற்சியாம்

(கொழும்பு)
இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பொது அமைப்பொன்றின் கண்காணிப்பில் சமாதான பேச்சுவார்த்தை நடாத்துமாறு தூண்டுவதற்கு ஐ. நா. சபை முயற்சித்து வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஏற்கனவே இலங்கை அரசு தரப்பிற்கு சில செய்திகள் வெளிநாடொன்றிலுள்ள இலங்

(6-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

செல்வம் ஆட்ஸ்
சுன்னாகம்

றபர் சீல்—விளம்பர போட்—நம்பர் பிளேட்—பிளாஸ்ரிக் நம்பர் பிளேட் பாடசாலைச் சின்னங்கள் — புலவரக் டிசைன்—தயாரிப்பாளர். (கி-459)

## PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். இ-374

## வாங்குகிறோம்

தூப்பரவான வேப்பம் விதை, வேப்பம் கோது, இலுப்பம் விதை விலைக்கு வாங்குகிறோம். 'மில்க்வைற்' (ஏ- 3422)

## சில்வா வாச் வேக்ஸ்

தொண்ணூற்றொன்று தொண்ணூற்றி இரண்டாம் ஆண்டுகளில் எம்மிடம் மணிக்கூடுகள் திருத்தக் கொடுத்தவர்கள் ரசீதுகள் தொலைந்திருந்தால், போடப்பட்ட உதிரிப்பாகங்களுக்கு மட்டும் பணம் செலுத்தி உங்கள் மணிக்கூடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம். சில்வா வாச் வேக்ஸ், அன்னை வேளாங்கண்ணி, 15, 1-ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3412)


## சமாதான உடன்படிக்கை ஈரான் நிராகரிப்பு

(தெஹ்ரான்)

இஸ்ரேல் பலஸ்தீன உடன்படிக்கையை ஈரான் நிராகரித்துவிட்டது. இந்த உடன்படிக்கை ஒரு சதியென்றும் பலஸ்தீனப் பிரச்சினைக்கு இது ஒரு தீர்வு அல்ல என்று ஈரானிய ஜனாதிபதி ஹஸ்மிரப்ஸன் ஜானி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் செல்வாக்கை மத்திய கிழக்குப் பகுதிகளில் அதிகரிக்க அமெரிக்கா எடுத்துள்ள முயற்சியே இந்த ஒப்பந்தம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேபோல பாகிஸ்தானும் இந்த ஒப்பந்தத்தைக் குறை கூறியுள்ளது. இஸ்ரேலை தான் அங்கீகரிக்கப்போவதில்லை எனவும் பாகிஸ்தான் கூறியுள்ளது. (ரி)

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆட்சிக் குழுக்கூட்டம் இன்று 16ம் திகதி வியாழக்கிழமை பி. ப. 4-30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத்தலைவர் திரு. வே. க. தனபாலன் தலைமையில் இடம்பெறும். (154)

## 149 பேர் உயிரிழப்பு

(லக்னோ)

இந்தியாவில் உத்தர பிரதேச மாநிலத்தில் பெய்து வரும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால்மேலும் 56 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வெள்ளப் பெருக்கினால் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 149 ஆக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உத்தர பிரதேச தலைநகர் லக்னோவில் இராணுவ வீரர்கள் அழைக்கப்பட்டு நிவாரணப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ரி)





ஸ்ரீ ராம ஜெயம்

# யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## மஹோற்ஸவ விஞ்ஞாபனம்

ஸ்ரீமுக வருடம் 1993-ம் ஆண்டு

16-09-1993 — 30-09-1993

| பகல் | மஹோற்ஸவ விபரம் | இரவுத் திருவிழாக்கள் |
|---|---|---|
| திருவிழாக்கள் | | |
| 16-9-93 | கருமாரம்பம், அநுக்ஞை | |
| 17-9-93 | கொடியேற்றம் துவஜாரோகணம் (பகல் 10-00 மணி) | 17-9-93 இரவு அன்னச் சேவை |
| 18-9-93 | கருட சேவை | 18-9-93 இரவு ஷேசசயன சேவை |
| 19-9-93 | வேடகம் | 19-9-93 இரவு கருடச்சேவை |
| 20-9-93 | வேடகம் | 20-9-93 இரவு அனுமச் சேவை |
| 21-9-93 | வேடகம் | 21-9-93 இரவு பூந்தண்டிகை |
| 22-9-93 | வேடகம் | 22-9-93 இரவு கஜேந்திர சேவை |
| 23-9-93 | வேடகம் | 23-9-93 இரவு சப்பறம் (வெண்ணைத்தாழிச் சேவை) |
| 24-9-93 | கருடச் சேவை | 24-9-93 இரவு அஸ்வாருட சேவை |
| 25-9-93 | பகல் 10-00 மணி தேர்த்திருவிழா (ரதோற்சவம்) | 25-9-93 இரவு கருடச் சேவை |
| 26-9-93 | பகல் 10-00 மணி தீர்த்தோற்சவம் | 26-9-93 இரவு (கொடியிறக்கம்) சந்திரபிறை சேவை |
| | | 27-9-93 (திருக்கல்யாணம்) பூந்தண்டிகை |
| | | 28-9-93 பூந்தொட்டி சேவை |
| | | 29-9-93 யோக நாராயணர் சேவை (விடாயாற்றி) |
| 30-9-93 | பகல் பிராயசித்த அபிஷேகம் வாசனே பூஜை | 30-9-93 (இரவு) ஆஞ்சநேயர் பொங்கல் |

இவ் உற்சவங்கள் யாவும் பகல் 11 மணிக்குள்ளும் இரவு 7 மணிக்குள்ளும் நடைபெறும்.

வண்ணை ஸ்ரீ வேங்கடேச
வரதராஜப் பெருமாள்
தேவஸ்தான ஆதீன மகாசபை

### உற்சவகால அருளுரைகள்

தினசரி இரவு 7-15 தொடக்கம் இரவு 8.15 வரை

17. 09. 93 "மூவரேற்றிய ஒளிவிளக்கு"
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை. யாழ். பல்கலைக்கழகம்)

18. 09. 93 "கூப்பிட்ட குரலுக்கு"
திரு. சி. சிவலிங்கராசா எம். ஏ.
(முதுநிலை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்

19. 09. 93 "ரகுநாயக வருக"
திரு. சி. சிவலிங்கராசா

20. 09. 93 "ஏன் பள்ளிகொண்டீரையா"
திரு. சோ. பத்மநாதன்
(துணைத்தலைவர், பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரி)

21. 09. 93 "ஓங்கி உலகளந்த உத்தமன்"
திரு. சோ. பத்மநாதன்

22. 09. 93 "அவதார மகிமை"
திருமதி நாச்சியார் செல்வநாயகம் எம். ஏ.
(முதுநிலை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

23. 09. 93 "வைஷ்ணவ பக்தி"
திரு. மா. வேதநாதன் எம். ஏ.
(முதுநிலை விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்)

24. 09. 93 "கங்கை வேடனும் காளத்தி வேடனும்"
திரு. ஆறு திருமுருகன்
(ஆசிரியர், விக்னேஸ்வராதயக் கல்லூரி)

25. 09. 93 "ஆன்மீக வாழ்வு காட்டும் அறம்"
திரு. ஆறு திருமுருகன்

26, 09. 93 "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி"
திரு. த. சிவகுமாரன்
(ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி)

27. 09. 93 "மானுடம் வென்றதம்மா"
திரு. த. சிவகுமாரன்

28. 09. 93 "பரதாழ்வான்"
திரு. இ. ஜெயராஜ்
(அமைப்பாளர், கம்பன் கழகம்)

29. 09. 93 "வாலி மோட்சம்"
திரு. இ. ஜெயராஜ்

30. 09. 93 "மங்கை நல்லாளின் நோன்பு"
திருமதி மனோன்மணி சண்முகதாஸ் எம். ஏ.

31. 09. 93 "பல்லாண்டு பல்லாண்டு"
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

இங்ஙனம்

தேவஸ்தான ஆதீன மகாசபை

மணிவாக்கு

“உண்மைகளை புறக்கணித்து விடுவதால் அவை உண்மைகளாய் இல்லாமல் போய்விடுவதில்லை”
— ஆல்டஸ் ஹக்ஸி.

# கொழும்பில் வாழும் தமிழர்கள் மீது புதிய பெயரில் இன ஒடுக்கு முறைகள்

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களில் வாழும் தமிழர்கள் மீது புதிய பெயரில் இன ஒடுக்குமுறையும், சித்திரவதைகளும் தொடர்ந்த வண்ணமுள்ளன.

விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் என்ற பெயரில் கொழும்பிலுள்ள அனைத்து தமிழர்களும் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் பெருமளவில் கைது செய்யப்பட்டு விசாரணை என்ற பெயரில் தடுத்துவைக்கப்பட்டும், அடிப்படை வசதிகளில்லாத கூண்டுகளில் அடைக்கப்படுவதும் இன்று சாதாரண ஒரு நிகழ்வாகிவிட்டது.

ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் இவ்வாறு கைதானவர்களில் சிலரின் விபரங்கள் பற்றி இது வரையும் சரியான தகவல்கள் வெளியிடப்படவில்லை.

புலி வேட்டை என்று கூறிக்கொண்டு இவ்வாறு கைது செய்யப்படுபவர்களும், தடுத்து வைக்கப்படுபவர்களும் அப்பாவித் தமிழர்கள் என்று தெரிந்திருந்தும், பொலிசாரின் இத்தகைய நடவடிக்கைகள் இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பது ஸ்ரீலங்கா அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையையே காட்டுகிறது.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழர்கள் மட்டுமல்ல இலங்கையிலுள்ள தமிழர்கள் அனைவருமே விடுதலைப் புலிகள் என்று கருதப்படும் நிலைபேற்பட்டுவிட்டது. ஸ்ரீலங்கா அரசும், படைகளுமே இத்தகைய நிலையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தென்பகுதியில் தமிழர் ஒருவரின் நடமாட்டம் காணப்பட்டால் அவரைப் புலிகள் எனக்கருதிக் கைது செய்யப்படுவதுடன் அப்பகுதிகளில் நீண்ட காலமாக வாழும் தமிழர்களும் சந்தேகத்துக்குரிய நபர்களாகச் சிங்களவரால் கருதப்படுகின்றனர்.

### துரை

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா, லலித் அத்துலத்முதலி ஆகியோரின் படுகொலைகளில் விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்று பொலிசார் தெரிவித்த தகவல்களையடுத்தே தமிழர்கள் கொழும்பில் இத்தகைய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள். அத்துடன் கொழும்பிற்குள் புலிகள் ஊடுருவிவிட்டார்கள் போன்ற பிரசாரங்களும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதனால் தமிழர்கள் கொழும்பில் நடமாடமுடியாத ஒரு நிலையேற்பட்டுவருகிறது.

பொலிசாரினது பிரசாரங்களையும் தகவல்களையும் தொடர்ந்து உத்தியோகபூர்வமற்ற முறையில் தமிழர்கள் கைது செய்யப்படுவதும் பணம் பறித்தலும் தொடர்கதையாகிவருகின்றது. இன்று கொழும்பு நகருக்குச் செல்லும் தமிழர் ஒருவர் போக்குவரத்துச் செலவு, தங்குமிடச் செலவுகளுடன் கைது செய்யப்படும் பட்சத்தில் தம்மை விடுவிப்பதற்கான பணத்தையும் கொண்டுசெல்லவேண்டிய நிலையேற்பட்டுவிட்டது.

பரீட்சைகள், நேர்முகப் பரீட்சைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் உட்பட பல முக்கிய தேவைகளுக்காக கொழும்பு செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேற்குறித்த பொலிசாரின் நடவடிக்கைகளினால் கொழும்பு செல்வதற்கு அஞ்ச வேண்டியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க மற்றும் உயரதிகாரிகளுடன் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியும், சுட்டிக்காட்டியும் கைதுகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

தமிழர் வாழுமிடங்கள் நள்ளிரவு வேளைகளில் திடீரென சுற்றிவளைக்கப்பட்டு தமிழர்கள் இம்சிக்கப்படுவதுடன் அவர்களது கைகளில், காதுகளில் கழுத்துகளிலுள்ள நகைகளும் பறித்தெடுப்பதுடன் பணமும் களவாகச் சூறையாடப்பட்டு வருகின்றன.

கொழும்பில் தாங்கள் தங்கியிருக்கும் காரணத்தை ஆதாரபூர்வமாக தெரிவித்தபோதும் அவர்கள் பொலிசாரின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இந்நிலை நிறுத்தப்படாதா என்று ஏங்கிய நிலையிலே கொழும்பிலுள்ள தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மேற்குறித்த நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸார் அல்லது படையினர் இதனை ஒரு இலாபம் ஈட்டும் தொழிலாக கருதிச்செயற்படுவதால் தற்போது இதனை நிறுத்துவதென்பது இலகுவான காரியம்.

இது விடயத்தில் அரசாங்கம் பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும் நல்ல பிள்ளை வேடம் போடுவது உலகிற்கு நன்கு தெரியும். தமிழின விடுதலைப் போராட்டம் உச்சமடைந்துள்ள இவ்வேளையில் கொழும்பிலுள்ள தமிழர்களும் மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு எதிராக தமது செயற்பாடுகளைத் தொடங்கினால் தான் நிம்மதியாக வாழ முடியும் இதனை அனைவரும் கருத்திற்கொள்ள வேண்டும்.

## நமது நோக்கு

### அம்மையார் போக்கு...!

“எக்காரணம் கொண்டும் நாட்டைப் பிரிக்க விடமாட்டேன்!” — இது திருமதி அம்மையார் உதிர்த்த மகாவாக்கியம்!

பிரதமர் பண்டாரநாயகாவின் மனைவியான அவர், 1960ல் உலகிலேயே முதற் பெண் பிரதமரான பெருமைக்குரியவர்.

கணவன் — மனைவி — மகள் ஆகியோர் முறையே பிரதமர்களாக இருக்கவேண்டும் என்ற பெருநோக்கோடு உழைத்து வருபவர்!

அவையத்து முந்தி இருப்பச் செயல் தந்தை மகற்காற்றும் நன்றி. தந்தையை இழந்த பிள்ளைகளுக்குத் தாய் செய்யும் கடமை அது!

ஆனால், பதவியைக் குடும்பத்திற்குள் பெற்றுவிடுதற்காக, நாட்டின் எதிர்காலத்தை கேள்விக்குறியதாக்கலாமா?

பிரதமரானபோது, கச்சேரி வாசலில் அமைதியாகச் சத்தியாக்கிரகம் செய்த நிராயுதபாணிகள் மீது படையை ஏவி, பிரச்னையைத் தீர்க்க முனைந்தவர்!

1970ல் மீண்டும் பிரதமரானபோது, புதிய குடியரசு யாப்பினைச் சில அறிவாளிகளைக் கொண்டு தயாரித்தார். சிறுபான்மையினருக்கு ஓரளவு பாதுகாப்புத் தந்த 29வது பிரிவுச் சட்டம் முற்றாகக் கைவிடப்பட்டது.

உரிமைக் கிளர்ச்சிகள் என்ற பேச்சுக்கே இனி இடமில்லை, முற்றாகத் தமிழர்களை அடிமையாக்கிவிட்டேன் எனப் புன்முறுவல் பூத்த முகத்தோடு இருந்தார்!

அதற்கும் மேலாக, உலகின் பல நாடுகள் அங்கத்துவம் வகித்த அணிசேரா இயக்கத்தின் தலைவியானார்.

பாவம், அம்மையார் 1977ல் படுதோல்வி அடைந்ததோடு, குடியுரிமையையும் இழந்தார்!

இன்று, தமிழர்கள் உரிமைக் கிளர்ச்சி வெற்றி நடைபோட்டு, உலக நாடுகளின் கவனத்தை கவர்ந்துள்ளது.

சிங்கள மக்களின் வாக்கைப் பெறுவதற்காக, ஆட்சித் தலைவர்கள் 'பயங்கரவாதப் பிரச்னை' என்று பாடிக்கொண்டிருக்க, அம்மையார் மேல்ஸ்தாயியிலேயே பாடத் தொடங்கிவிட்டார் “பிரிக்க விடமாட்டேன்!” என்று.

மகனும், மகளும் பிரிந்துவிடுவார்களோ, கட்சி பிரிந்து போய்விடுமோ என்ற வீட்டுக் கவலையை மறந்து, நாட்டுச் சிந்தனை தோன்றியது அவருக்கு அமைதியைத் தரும் என நம்புகிறோம்!

## யப்பான் நிறுவன உதவியுடன் இலங்கையருக்கு பயிற்சி

(கொழும்பு)

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை யப்பான் யமஹா மோட்டார் நிறுவனத்தின் உதவியுடன் இலங்கை இளைஞர்களுக்கு பயிற்சிகளை வழங்க முடிவு செய்துள்ளது.

இதன் பிரகாரம் முப்பது பேர் கொண்ட பயிற்சிக் குழுவொன்றை தெரிவுசெய்து கண்ணாடி பொருத்தப்பட்ட பிளாஸ்டிக் படகு உற்பத்திக்கான தொழில் நுட்பம், படகுக்கு வெளியில் மோட்டார் பொருத்துதலுக்கான தொழில் நுட்பம் பற்றிய பயிற்சி நெறிகளில் இருவருட காலத்துக்கு பயிற்சி அளிக்கப்படும்.

இப்பயிற்சி நெறிகளை மேலும் விரிவுபடுத்து முகமாக அண்மையில் தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் ஊறுகொடவத்தை மோட்டார் வாகன இயந்திரவியல் நிறுவனத்திற்கு யமஹா நிறுவனங்களால் மோட்டார் படகு எஞ்சின்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. (1-சி)

## குரக்கன் செய்கை கூடிய விளைச்சலை தந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறுபோகத்தில் பயிரிடப்பட்ட குரக்கன் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் இருந்து 1½ மெற்றிக் தொன்னுக்கு சமமான விளைச்சல் பெறப்பட்டுள்ளது வழமையைவிட இம்முறை குரக்கன் செய்கையானது மிகக் கூடிய விளைச்சலைக் கொடுத்துள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரக்கன் சத்துள்ள ஒரு சிறுதானியமாக இருப்பதுடன் சலரோகம் போன்ற பலவேறு நோய்களுக்கும் சிறந்த உணவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்தோடு தமிழ் மக்கள் இதனை சேமித்து வைத்து உணவுப் பொருட்கள் தட்டுப்பாடான காலத்தில் உணவுப் பண்டங்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதனை நியாயமான விலையில் சந்தைப்படுத்துவதற்கான ஒழுங்குகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து ஒழுங்கு செய்துள்ளது.

குரக்கன் பயிர் அறுவடை செய்த பின்னர் கிடைக்கும் ஒட்டை வீணாக்காது சேமித்து வைத்து கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்துமாறும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அந்தப் பூச்சிக்கு நொச்சித் தழை

## இராசிபலன்

16-09-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஆவணி 31)

அமாவாசை மு. ப. 9-36 வரை. உத்தரம் பி. இ. 3-51 வரை. மரணயோகம், இராகு காலம் பிற்பகல் 1-33 முதல் 3-03 வரை. சுபநேரம் காலை 7-33 முதல் 9-03 வரை.

மேடம்: தனசம்பத்து, கீர்த்தி, நண்பர் ஆதரவு.

இடபம்: மனைவிக்கு துன்பம், காரியத்தடை, அலைச்சல்.

மிதுனம்: தொழில்பாதிப்பு, உடன் பகை, மனவிரக்தி.

கடகம்: புதிய முயற்சி, திருமணப் பேச்சு, கலந்துரையாடல்.

சிம்மம்: அதிகாரிகள் சீற்றம், குடும்ப பிரிவு, வேதனை.

கன்னி: தொழில் லாபம், கருத்து உடன்பாடு, தெய்வ சிந்தனை.

துலாம்: தைரியக் குறைவு, விரோதம், மனச்சோர்வு.

விருச்சிகம்: கூடுதல் வருவாய், உறவினர் பெருமை, காரிய சித்தி.

தனுசு: தந்தையார் அறிவுரை, பணவரவு, சுபச் செலவு.

மகரம்: கௌரவப் பாதிப்பு, [illegible], அபஜெயம்

கும்பம்: கைப்பொருள் அழிதல், மனச் சஞ்சலம், துயரம்.

மீனம்: வித்தை முன்னேற்றம், சாஸ்திரஞானம், வெகுமதி.

ஜோஸ்யர்

## பழ வர்க்க உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயத் திணைக்களம் பழவர்க்கங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு துரித அமுலாக்கல் திட்டமொன்றைச் செயற்படுத்தி வருகின்றது.

இதன்படி 98 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வாழையும், 87 ஹெக்டேயர் பரப்பில் மாமரமும் மீள்நடுகை செய்யப்பட்டுவருகிறது. மேலும் 300 ஹெக்டேயரில் வாழையும், 380 ஹெக்டேயரில் மாமரமும் பயிரிடப்பட்டுள்ளன.

இத்துடன் 2 லட்சத்து 75ஆயிரம் ரூபா செலவில் 5122 மாமர கன்றுகளையும், 3604 தென்னங் கன்றுகளையும் 602 செவ்விழநீர் கன்றுகளையும், 1200 எலுமிச்சை கன்றுகளையும் 2520 நாரத்தைக் கன்றுகளோடும் விவசாயத் திணைக்களம் விநியோகித்துள்ளது. (71-சி)

## நீயெங்கள் நெஞ்சமதில் நிலைத்திருப்பாய்

சித்தையிலே பாரதம்செய் பாதகத்தை
சீர்தூக்கிப் பாருங்கள் செகத்தீரென்று
உந்தியிலே ஓர்துளிநீ ரேனுமருந் தாது
ஓர்தியாக வேள்வியிலே ஆகுதி யாய்
செந்தமிழர் வாழ்நல் லூர்வீ தியிலே
சேர்ந்தடங்கிப் போனதி லீப சுடரே!
நற்தமிழால் ஈழமதை உள்ள வரை
நீயெங்கள் நெஞ்சமதில் நிலைத்திருப்பாய்.

“இளங்கவி”.

# இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் நழுவல் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயற்படுகிறது!

''ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது', என்று மூத்தோர் வாக்கு ஒன்றுண்டு. ஆக்க பூர்வமாக பதாரித்த மாக நடவடிக்கையில் இறங்காது வெறும் புத்தகங்களிலும் பிரசுரங்களில் எழுதிய குத்தகைகள் பிரயோசனமற்றன என்று இவ்வாக்கு பொருள்படும்.

இலங்கை அரசியலில் சிறுபான்மையினமான தமிழர்களின் பிரச்னைகளை தென் இலங்கை அரசியல் கட்சிகள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் கொள்கை அறிவிப்பு பிரசுரங்களிலும் அவ்வப்போது ஆளும் அரசாங்க நடாளுமன்றில் சட்டங்கள் இயற்றி 'ஹன்சாட்', புத்தகங்களிலும் பதிப்பித்து வைப்பதில் தான் இவ்வளவு காலமும் தமிழர் பிரச்னையை அணுகியுள்ளனர். அசல் சுரக்காயைப் போன்று ஆக்கபூர்வமாக எவ்வித நடடிக்கையிலும் இதுவரை அவர்கள் ஈடுபடவில்லை.

அண்மையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி கூட தனது கொள்கைகளை மறுசீரமைத்து வெளியிட்டுள்ளது. விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் திருத்தம் கொண்டு வரல் தொகுதி ரீதியாக உறுப்பினர்களை தெரிவு செய்தல். எல்லைகளை மீளாய்வு செய்தல் போன்ற புதிய கொள்கைகளின் அறிவிப்போடு தமிழர் பிரச்னையையும் அறிவித்துள்ளார்கள்!

''வடக்கு கிழக்கு மக்கள் மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். தீர்வு நாட்டின் கரையோரப்பகுதி துறைமுகங்கள் விமானத் தளங்கள் ஆகியவை ஒற்றையாட்சி முறையில் மத்திய அரசின் கீழ்கொண்டு வரப்படவேண்டும். அத்தோடு வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழும் ஏனைய அந்நிய இனங்கள் கௌரவத்தோடும் விசுவாசத்தோடும் வாழ்வதற்கு ஏற்ற தீர்வாக இருக்கவேண்டும்''

1977ம் ஆண்டு தொடக்கம் இலங்கை அரசியலில் பாரிய எதிர்க்கட்சியாக இருந்து வரும் அவர்கள் இந்தப் புதிய கொள்கைகளை மக்கள் முன் வைத்து அரசைக் கைப்பற்றலாம் என்ற உள்ளீடு புதிய கொள்கை அறிவிப்பில் புலப்படுகின்றது.

வடக்கு கிழக்குப் பிரச்னையில் இவர்கள் நிலைப்பாடு என்ன? தீர்வுக்கு சமஷ்டியா மாகாண சுயாட்சியா அல்லது தமிழர்களை அடிமைகளாக வைத்து அரசாங்கத்தை நடத்துவதா? என்று தங்கள் கொள்கை விளக்கத்தில் குறிப்பிடாது 'நழுவல்' கொள்ளும் மனோ பாவத்தில் கொள்கை விளக்கத்தை அறிவித்துள்ளார்கள்.

இவர்கள் 24 மணி நேரத்துக்குள் சிங்களம் மட்டும் சட்டத்தை கொண்டு வந்தவர்கள் 1972ம் ஆண்டு புதிய அரசியலமைப்பை உருவாக்கி சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக இருந்தது 29 ஷரத்தை நீக்கியவர்கள். யாழ்ப்பாணக் கச்சேரி முன்புறத்தில் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் தலைமையில் சத்தியாக்கிரகம் இருந்த அகிம்சாவாதிகளை இரவிரவாக படையினரை ஏவிட்டு தாக்குதல் நடத்தி தங்கள் பலத்தை நிரூபித்தார்கள்.

---

மகரம்

---

கடந்த காலங்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இப்படியாக செய்த தவறுகளே நாடு இந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்று இங்கு பெரும்பான்மை கட்சிகளே இன்று அவர்கள்மேல் குற்றம் சுமத்தியுள்ளன

இன்று உலக அரங்கில் தமிழர் போராட்டம் நியாய பூர்வமானது அவர்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டுமென்று கருத்து மேலோங்கி வருவதால் இந்தப் பிரச்னையில் ஒரு அக்கறை கொண்டவர்கள் போன்று புதிய கொள்கை விளக்கத்தில் உப்புச்சப்பற்ற தீர்வாக சில கருத்துக்களை சொல்லி தப்பப் பார்க்கிறார்கள்.

ஏதோ தாங்கள் சிறுபான்மையினர் பிரச்னைக்கு ஆக்கபூர்வமாக நடவடிக்கைகள் எடுத்துவிட்டது போன்று தற்போது மேடைகளிலும் தொடர்பு சாதனங்கள் மூலமும் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அண்மையில் கூறுகையில் ஐக்கிய தேசியக்கட்சி சிறுபான்மையினர் விடயத்தில் எந்தத் தீர்வையும் முன்வைக்கவில்லை. இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு விருப்பமில்லை. இது பிச்சைக்காரனின் புண்ணைப்போன்று வளரவேண்டும் என்பது அவர்களின் விருப்பம் எனக்கூறியுள்ளார்.

ஆனால் அவர்களுடைய உள்ளுணர்வுகள்பற்றி நவசமசமாசக்கட்சி தனது அறிக்கையில் ''யுத்தத்தை தீவிரப்படுத்துவதற்காக விஜயதுங்க அரசுக்கு ஆதரவளிப்பதாக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார்'' என்று தெரிவித்துள்ளது.

ஆனால் யுத்தத்தை தீவிரப்படுத்தி, இனவாதம் பேசினால் மட்டுமே ஒருவேளை அரசாங்கத்தை மீண்டும் கைப்பற்றும் நிலைதான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இன்று இருக்கின்ற ஒரே வழி ஆட்சியைக் கைப்பற்றும் ஏனைய வழிகளையும் ஐக்கிய தேசியக்கட்சி நாசுக்காக தனது ராஜதந்திரத்தால் மூடியுள்ளது.

இன்று ஏராளம் சிங்கள இளைஞர்கள் யுத்தத்தில் மடிகிறார்கள் என்று அலறப்படும் ஸ்ரீமாவோ, வடக்கு கிழக்கில் குண்டு வீச்சினால் தினம்தினம் சாதாரண குடிமக்கள் கொல்லப்படுவதை எப்படி நியாயப் படுத்தப் போகிறாரோ?

தமிழர்களைப் பொறுத்தமட்டில் புதிய சொல்லைகள் அறிவிப்பு என்று ஒரு முகமூடி அணிந்த நிலையில் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம்முன் தோற்றம் பெறுகின்றது. தென் இலங்கை பெரும்பான்மை கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழர்களைப் பொறுத்தவரை இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்ற நிலைப்பாடுதான்.

---

## தமிழீழ நீதிமன்றில்..

(நெல்லியடி)

பருத்தித்துறை வதிரி தமிழீழ நீதிமன்றத்தில் நீதியாளர்களான ஜெனகன், ஒப்பிலான், ஜேகநாதன் ஆகியோர் முன்னிலையில் வழக்குகள் அண்மையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கம்பர்மலை-வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரத்தினம் பிரேமதாசா, உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த சுந்தரம் ஜெயராசா ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிளைத் திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இருவருக்கும் தலா 900 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இளம் குடும்பஸ்தரை வாளினால் வெட்டிக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த முத்துலிங்கம் சந்திரகுமார் என்னும் இளைஞருக்கு ஐநூறு ரூபா அபராதமும், காயப்பட்டவருக்கு இழப்பீடாக 500 ரூபா செலுத்துமாறும் நீதியாளர்கள் உத்தரவிட்டனர்.

குடவத்தை துன்னாலையைச் சேர்ந்த இராசையா இராசரத்தினம் என்பவர் திருமதி கந்தன் பொன்னி என்னும் மூதாட்டியை கூரிய ஆயுதத்தினால் காயப்படுத்திய குற்றத்திற்காக குறிப்பிட்ட நபருக்கு ஆயிரம் ரூபாவும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஐநூறு ரூபாவும் வழங்குமாறும் தீர்ப்பளித்தனர்.

கரணவாய் மேற்கு கின்னத்தம்பி செல்லநாயகம் என்பவர் திருமதி தம்பிராசா பன்னீர்ச்செல்வம் என்னும் பெண்ணை அடித்த குற்றத்திற்காக 200 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு விசாரணைவேளையில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நாகர்கோவில் காவல்துறைப் பொறுப்பாளர்கள் வழக்குகளை நெறிப்படுத்தினர்கள். -160

---

### சனசவிய வங்காளர்

(யாழ்ப்பாணம்)

''மகளிர் அபிவிருத்தி நிலையம் 1993 ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து சனசவிய நிதியத்தின் பங்காளராக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாக சனசவிய நம்பிக்கை நிதிய திட்டப் பொறுப்பாளர் திரு. ஆனந்த வீரசேகர அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து போசாக்கு தொடர்பான செயற்திட்டங்களை யாழ். பிரதேச மக்களுக்கு செயற்படுத்துவதற்கான முயற்சியில் மகளிர் அபிவிருத்தி நிலையம் ஈடுபட்டுள்ளதாக இந்நிலைய இயக்குனர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (இ)

---

### தென்னம்பிள்ளை விநியோகம்

(பண்டத்தரிப்பு)

தொல்புரம், நல்லூர், சாவகச்சேரி ஆகிய கமநலச் சேவை நிலையங்களில் நல்ல இன தென்னம் கன்றுகள் சகாய விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை தற்போது கொழும்பு சென்றுள்ள யாழ். கமநலச்சேவை திணைக்களத்தின் சிரேஷ்ட உதவி ஆணையாளர் யாழ் மாவட்டத்திற்கு தேவையான தென்னை உரத்தை கப்பல் மூலம் இங்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72-சி)

---

## ஓய்வூதிய முரண்பாடு தீர்த்து வைக்கப்படவேண்டும்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் - மேற்கு அரச ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தினர் ஓய்வூதிய முரண்பாடுகள் நிவர்த்திசெய்யப்படவேண்டுமெனக் கோரி கொழும்பு சதாம் வீதியிலுள்ள ஓய்வூதியத் திணைக்கள செயலாளருக்கு அனுப்பி வைத்த மகஜர் ஒன்றில் மேற்கண்ட தீர்மானமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்க விசேட கூட்டம் ஒன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட மகஜரில் இடம் பெற்றுள்ள இதர தீர்மானங்கள் வருமாறு;

அரச ஊழியர் போன்று ஓய்வூதியர்க்கும் மூன்று சோடி ரயில் பயணச் சீட்டு வழங்கப்படவேண்டும். குறிப்பிட்ட ஒரு தகுதியிலோ, சேவையிலோ இருந்து ஓய்வு பெறும் ஒரு அலுவலர் அதே நிலையிலிருந்து இப்போது ஓய்வு பெறும் ஒரு அலுவலரது ஒத்த ஓய்வூதியத்தைப் பெறவேண்டும். அரச கரும மொழிக் கொள்கையால் ஓய்வுபெற்ற, அதனால் குறைக்கப்பட்ட சிறு தொகையை ஓய்வூதியமாகப் பெறுபவர்களின் ஓய்வூதியம் திருத்தப்பட்டு, முழுவருடமும் சேவைக்கு எடுக்கப்பட்டு ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும். இறந்த ஓய்வூதியரின் திருமணமாகாத பெண்கள் வலதுகுறைந்தவர்கள் என்ற பேதம் இல்லாது சகலரும் அந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு ஏற்றவகையில் திட்டம் அமைக்கப்படவேண்டும். ஒவ்வொரு வாழ்க்கைப்புள்ளி உயர்வுக்கும் ஐந்து ரூபா கட்டப்படவேண்டும். அரச ஊழியருக்குச் சம்பள உயர்வு கொடுக்கும்போது ஓய்வூதியருக்கும் அது கிடைக்கக்கூடியதாக ஓய்வூதியத் திட்டம் அமைக்கப்படவேண்டும். (139-ரி)

---

## அன்னை திரேசாவிற்கு அறுவைச் சிகிச்சை

(கல்கத்தா)

அன்னைதிரேசாவின் உடல்நிலை தற்போது முன்னேற்றகரமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்:

கல்கத்தாவிலுள்ள மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுவரும் அன்னைதிரேசாவிற்கு அறுவைச் சிகிச்சை வழங்கும் சாத்தியங்கள் உள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர். -ரி

---

## பாலர்பாடசாலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலமைந்துள்ள பாலர் பாடசாலைகளில் ஆசிரியப் பயிற்சி பெறுமல் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்காக பயிற்சி வகுப்புகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன:

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற இருக்கும் இப்பயிற்சியில் சனசமூக நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள் போன்றவற்றினால் நடாத்தப்படும் பாலர் பாடசாலைகளில் கடமையாற்றி வரும் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (162-ரி)

---

### சேமிப்பு கணக்கு

(வட்டுக்கோட்டை)

வட இலங்கைச் சர்வோதய சங்கத்தினர் விடுத்த வேண்டுகோளுக்கமைய சுன்னாகத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியினர் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழக மண்டபத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த சர்வோதய அங்கத்தவர்களுக்கு தேசிய சேமிப்புக்கணக்கைத் ஆரம்பித்துவைத்தனர்.

---

## சுற்றுடல் நடவடிக்கைகள் பன்முகப்படுத்தப்படுகிறது

(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனவரி முதல் சுற்றுடல் நடவடிக்கைகள் சம்பந்தமான அதிகாரங்கள் பிரதேச மட்டத்துக்கு பன்முகப்படுத்தப்படவுள்ளது சுற்றுடலும் அபிவிருத்தியும் சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகளையும் இணைக்கும் பொறுப்பு பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்படும்.

சுற்றுடல் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் பொறுப்பு உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்படும்.

ஒவ்வொரு பிரதேச சபைகளிலிருந்தும் தலா இரு அதிகாரிகளைத் தெரிவுசெய்து சுற்றுடல் நடவடிக்கைகள் சம்பந்தமாக பயிற்சியளிக்கப்படும். ஒவ்வொரு பிரதேச சபையிலும் சுற்றுடல் கவுன்சில்கள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (71-ரி)

## செவன இராணுவ முகாமிலிருந்து
# காணாமல் போன மாணவரின் விபரங்கள் கோரப்படுகிறது

(கொழும்பு)

1991ம் ஆண்டு பிற்பகுதியில் எம்பிலிப்பிட்டியாவிலுள்ள செவன இராணுவ முகாமிலிருந்து காணாமல்போன 46 மாணவர்களின் கதி பற்றி சர்வதேச மன்னிப்புச்சபையின் அவுஸ்திரேலிய நாட்டுக் கிளை இலங்கை அரசிடம் கோரியுள்ளது.

இவர்களின் தற்போதைய நிலைபற்றி அறிய சுதந்திரமான விசாரணைக் குழு ஒன்றை அமைக்குமாறும் அது கோரிக்கை விடுத்துள்ளது.

இக்குழுவினர் ஏற்கெனவே இதுபற்றி இலங்கை அரசிடம் கேட்டபோது, காணாமல் போன 46 மாணவர்களின் விபரம் குறித்து சி. ஐ. டி. பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை சி. ஐ. டி. பொலிஸார் எதுவித அறிக்கையையும் வெளியிடவில்லை. மாணவர்களது நிலைபற்றியும் எதுவும் தெரியவரவில்லை.

சி. ஐ. டி. பொலிஸாரினால் காணாமல்போன மாணவர்களின் நிலைபற்றி அறியமுடியாவிடின் சுதந்திரமான விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமித்து மாணவர்பற்றி அறியுமாறும் மேற்படி மன்னிப்புச் சபை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

ஜே. வி. பி. ஆதரவாளர்கள் என்ற பேரலையில் 18 வயதிற்கும் குறைவான மாணவர்கள் 46 பேர் எம்பிலிப்பிட்டிய பாடசாலையிலிருந்து பிடித்துச் செல்லப்பட்டு செவன இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். பின் இவர்கள்பற்றி எதுவுமே தெரியாதென இராணுவம் கைவிரித்துவிட்டது. —இ

## தி. மு. க.வின் ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டது

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மற்றும் வேறு இருவர் மீதும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யமுடியாதென தெரிவித்து முன்னாள் தமிழக ஆளுநர் பீஷ்மர் நாராயண் சிங் மேற்கொண்ட முடிவை எதிர்த்து தி. மு. க. தாக்கல் செய்த ரிட் மனு செல்லுபடியாகாதென சென்னை உயர்நீதிமன்றம் நேற்றுத்தீர்ப்பளித்தது.

நீதிபதி எம் சீனிவாசன், நீதிபதி தங்கமணி ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் தமது தீர்ப்பை நேற்று வழங்கினர்.

அரசியல் அமைப்புச் சட்டப்படி ஆளுநரின் செயலை எந்த நீதிமன்றத்திலும் பிரச்சினைக்கு உள்ளாக்கக்கூடாது என்ற சட்டத்தரணிகளின் வாதத்தை ஏற்று நீதிபதிகள் மேற்படி தீர்ப்பை வழங்கினர். —ச-பி

## தியாகி திலீபன் நினைவு
# உண்ணாவிரதமும் சிரமதானப் பணியும்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 6ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நாளை 17ம் திகதி உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும் இடங்கள் மற்றும் பங்குபற்றுவோர் விபரம் வருமாறு:

### வலிகாமம் கோட்டம்

சங்கானை - அரசடி வைரவர் கோவில் முன்றல், சுழிபுரம் சுற்றூர் மக்கள். கோப்பாய், வாதரவத்தை பிள்ளையார் கோவில், நீர்வேலி ப. நோ. கூ. ச., நீர்வேலி மின்சார சபை, சண்டி. மூத்தவிநாயகர் கோவில் ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய் சுற்றூர் மக்கள். உடுவில் / தெல்லிப்பளை - சுன்னாகம், சிவன் கோவில். இணுவில் சுற்றூர் மக்கள். யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசாமி கோவில் வீதி. - சிறை அலுவல்களின் சங்கம். நல்லூர் - நல்லூர் கந்தசாமி கோவில் வீதி - அரியாலை / நல்லூர் மக்கள்.

### வடமராட்சிக் கோட்டம்

கரவெட்டி - சாமியார் அரசடி தெல். இ. மு. வரி. சங்கம், கரவெட்டி வேலிகப்பூது சுற்றூர் மக்கள், உடுப்பிட்டி: உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடி (கி. சபை) கெருடாவில், கெருடாவில் தெற்கு மக்கள். பருத்தித்துறை: அல்வாய், முத்துமாரியம்மன் கோவிலடி - புலோலி.

### வட - வட கிழக்கு தென்மராட்சிக் கோட்டம்

பளை; பளை பிரதேச சபை - தம்பாமம் கிற். உற். குழு, கிறகு வெ. சங்கம், கொடிகாமம்; புகையிரத நிலைய அருகாமை - கல்வயல் ச. ச. நி. தாவளை, இயற்றாலை, எழுதுமட்டுவாள் தெற்கு. ஸ்ரீ கணேச ச. ச. நிலையம் உசன், ம. வீதி, கொடி. வ த. க. பாடசாலை.

சாவகச்சேரி - மணல் குழாய் பிள்ளையார் கோவில், நுணாவில் 190ம் கட்டை சாவக நகர், மட்டு. வட, நுணாவில். மே. கைதடி, நுணாவில், சாவக. வட. ப. நோ. கூ. சங்கம், டிறிபேக் கல்லூரி, சரசாலை சரஸ்வதி வித்தி. கைதடி: கைதடி சந்திக்கு அருகாமையில் - மறுவன்

(6-ஆம் பக்கம் பார்க்க)


**POSTPONEMENT**

யாழ். மருத்துவ சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

17-09 93 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவிருந்த மேற்படி பொதுக் கூட்டம் பின்போடப்பட்டுள்ளது என்பதைச் சகல அங்கத்தினர்களுக்கும் அறியத்தருகிறேன்.

அசௌகரியங்களுக்கு வருந்துகிறேன்

Dr. A. கைலநாதன்
போதனா வைத்தியசாலை, கௌரவ செயலாளர்
யாழ்ப்பாணம்.
15-09-1993 (சி 464)


# கடல் தடை குறித்து இலங்கை இந்திய அரசுடன் ஆலோசனை

(புதுடில்லி)

வடக்கு கிழக்குப் பகுதி கடலில் விதிக்கப்பட்டுள்ள கடல் தடைச்சட்டம் தொடர்பாக இந்திய அரசுடன் இலங்கை அரசு தற்போது பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வெளித்தாஸ் தெரிவித்தது.

இத்தடைச் சட்டத்திற்கு இந்தியா ஆட்சேபனை தெரிவித்துள்ளதுடன் இதனை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு இலங்கையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதனையடுத்து ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் இலங்கை அரசு தற்போது இதுகுறித்து இந்தியாவுடன் ஆலோசனை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

இப்பிரச்சினையை இந்தியாவுடன் பேசி சுமுகமாக தீர்த்து வைக்கப் போவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை தமிழகத்தில் பழனி, ராணிப்பேட்டை தொகுதிகளில் நடைபெறவிருக்கும் தேர்தலில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல முடியாத நிலை ஒரு தேர்தல் கோஷமாக மாறிவிடுமோ என இந்திரா காங்கிரஸ் கட்சி அஞ்சுகிறது.

இதேவேளை கப்பற்படை மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலை இலங்கை அரசு ஒரு நொண்டிச்சாட்டாக எடுத்துக் கொண்டு இத்தகைய தடையை விதித்திருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். —பி


விரைவில் எதிர்பாருங்கள்!

★ கதம்ப விழா ★

நவாலி ஸ்ரேஷன் பாடசாலை

(ஏ-3423 அதிபர்.



உ

## நன்றி நவிலல்

12—09—1993 ல்

தெல்லிப்பழை-கலை இலக்கிய களம் - இணுவிலில்

ஒழுங்கு செய்த எனது

## மணி விழா

நிகழ்ந்தபோது வருகை தந்து, சொன்மாலை-மலர்மாலை பொன்னாடை புனைந்து பாராட்டி நல்வாழ்த்து நல்கிச் சிறப்பித்த களத்தினர்க்கும்; எழுத்தாள நண்பர்களுக்கும் அறிஞர் பெரு மக்களுக்கும், கலை இலக்கிய ஆர்வலர்கள் சுவைஞர்களுக்கும், யாழ். இலக்கிய வட்டம், குரும்பசிட்டி சன்மார்க்க சபை, அகில இலங்கை கம்பன் கழகம், யாழ். திருமறைக் கலாமன்றம், தெல்லிப்பழை கலாரஞ்சனி சபா, தெல்லிப்பழை - காசி விநாயகர் தேவஸ்தானம், துர்க்காபுரம் மகளிர் இல்லம், தாவடி இ. த. க. பாடசாலை பழைய மாணவர் சங்கம், பா. அ. சங்கம், ஆகிய பொது நிறுவனங்களுக்கும் இனிய உற்றார் உறவினர்களுக்கும், மற்றும் அன்பு நெஞ்சங்களுக்கும் என்றும் நெஞ்சகலா உளமார்ந்த அன்புடன் நன்றி நவின்று மகிழ்கின்றேன்.

மகன், துணைவியுடன்

அநு. வை. நாகராஜன்.

"சங்கராபரணம்"
தென்மயிலை, தெல்லிப்பழை/
தாவடி, கொக்குவில்.
15-09-93. (சி-465)


## ஊழியர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனத்தில் தொடர்ந்து இருபத்தி ஐந்து வருடங்கள் சேவை புரிந்த நான்கு ஊழியர்களைக் கௌரவித்து விருது வழங்கப்பட்டது.

யாழ். செனைக கேட்போர் கூடத்தில் கடந்த 10ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த வைபவத்துக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமை தாங்கினார்.

இந்த வைபவத்தில் உதவிப் பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு. எஸ். வேலாயுதம், பொறியியலாளர் திரு இ. செல்வச்சாமி, படவரைஞர் திரு வி. மகேந்திரா, பதவி நிலை உத்தியோகத்தர் திரு. கே. சிவலிங்கம் ஆகிய நால்வருமே தங்க விருது அளித்துக் கௌரவிக்கப்பட்டனர். (162)


கோப்பாய் வடக்கு

## அந்தியகாலச் சேவைச் சபை
## அந்தியேட்டி மட சேவை

கீரிமலையில் அந்தியேட்டி, பிதிர்கடன்களை நிறைவேற்ற முடியாத சிரமத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு சபையினால் சகல வசதிகளும் கொண்ட ஒரு அந்தியேட்டி மடம் கோப்பாய் கைதடி வீதியில் கடல் கரைக்கு அண்மையில் அமைக்கப்பட்டு கிரியைகள் நடைபெறுகின்றன.

கிரியைக் குருவாக கீரிமலையில் சிறப்பாக கிரியைகள் செய்த பிரம்மஸ்ரீ க. சந்திரசேகரசர்மா சபையால் நியமிக்கப்பட்டுள்ளார். கிரியைகள் செய்ய விரும்பும் குருமார் அதற்கான அனுமதியை சபைச் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளவும்.

கிரியைகள் செய்வோர் நேரத்தை ஒதுக்கீடு செய்வதற்குதவியாக தமது கிரியை தினத்தை முன்கூட்டியே மடப் பொறுப்பாளர் திரு. க. சின்னத்துரையுடன் தொடர்புகொண்டு உறுதி செய்யவும்.

சி. க. சுப்பிரமணியம் — தலைவர்.
வே. சண்முகலிங்கம் — செயலாளர்.

கோப்பாய் 1-9-1993. (ஏ-3420)

# தெற்கில் மீண்டும் ஜே.வி.பி.; ஆயுதங்களுடன் பலர் கைது

## பல்கலைக்கழகங்கள் மீது கண்காணிப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் மீண்டும் ஜே. வி. பி. இயக்கத்தின் செயற்பாடுகள் அதிகரித்து வருவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் தெற்கில் குறிப்பாக காலி, தங்காலை, களனிப் பகுதியில் ஆயுதங்களுடன் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனராம். முதலில் இவர்கள் கொள்ளைக் கோஷ்டி எனக் கருதப்பட்ட போதிலும், பின் இவர்கள் ஜே. வி. பி.யைச் சேர்ந்தவர்கள் என விசாரணை மூலம் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

மேலும், தெற்கில் பல்கலைக் கழகங்களில் ஜே.வி.பி. ஆதரவு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர். இதையடுத்துப் பல்கலைக் கழகங்கள் மீது இரகசியப் பொலிஸாரின் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாம். (வி)

# கிளாலி கொலைக்கு பலத்த கண்டனம்

(கொழும்பு)

யாழ்குடாநாட்டின் பேச்சுப் பாதைகள் அனைத்தும் தடுக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் கிளாலி யூடாக பயணம் செய்யும் பொதுமக்களை அரச படைகள் தாக்குவதனை கொழும்புப் பத்திரிகையொன்று கடுமையாக கண்டித்துள்ளது.

பயணிகளுக்கு பாதுகாப்பான போக்குவரத்தை ஒழுங்கு செய்யாது, வேறுவழியின்றி கிளாலி யூடாக பிரயாணம் செய்யும் பொதுமக்கள் மீது படையினர் தாக்குவது கண்டிக்கப்பட வேண்டியதாகும் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (கே-சி)

# ‘தாஜ்மகா’லுக்கு ஆபத்து

## 212 தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா!

(புதுடில்லி)

உலக அதிசயங்களில் ஒன்றான இந்தியாவின் ‘தாஜ்மகால்’, தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் புகையினால் சேதமடைவதாகக் கூறி, ஆக்ராநகரிலுள்ள 212 தொழிற்சாலைகளை மூடுமாறு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தத் தீர்ப்பினால் 2 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்படுமென நாடாளுமன்றில் குரல் எழுப்பப்பட்டுள்ளது.

ஆக்ராநகரை பெரிதும் மாசுபடுத்தும் இந்திய அரசுக்குச் சொந்தமான எண்ணை சுத்திகரிப்பு ஆலையை மட்டும் மூடாதிருக்க இந்திய அரசு இரகசிய மாக விதிவிலக்கு பெற்றது எவ்வாறு எனவும் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (கே-சி)

# ஐ. நா. படைக்கு அரபாத் அழைப்பு

★ ஒப்பந்தத்தை அமுலாக்க

# இஸ்ரேல் கடும் எதிர்ப்பு

(நியூயோர்க்)

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையில் கைச்சாத்தான சுயாட்சி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் பலஸ்தீன சுயாட்சிப் பகுதிக்குள் ஐக்கிய நாட்டு அமைதிகாக்கும் படையை அனுப்புமாறு யசீர் அரபாத் யோசனை கூறியுள்ளார்.

19 வருடங்களின் பின் ஐ. நா. தலைமைக் காரியாலயத்திற்கு விஜயம் செய்த பி. எல். ஓ. தலைவர் யசீர் அரபாத் ஐ. நா. செயலாளர் நாயகத்தை சந்தித்து பேச்சு நடத்திய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை பலஸ்தீன சுயாட்சி பகுதிக்குள், ஐ. நா. வின் அமைதி காக்கும் படையை நிறுத்தும் அரபாத்தின் யோசனைக்கு இஸ்ரேலும் எதிர்ப்பு தெரிவித்ததோடு இந்த யோசனை தேவையற்றதாகும் என்றும் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் புதியசமாதான உடன்படிக்கைக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படலாமென்ற தொரு அச்சநிலை தலைதூக்கியுள்ளதாம். (கே-சி)

# அரபாத்தை கொல்லுமாறு பல தரப்பிலும் அழைப்பு

(டெல்அவிவ்)

யசீர் அரபாத்தை படுகொலை செய்ய ஈரானிலிருந்து வெளிவரும் இஸ்லாமிய மத அடிப்படைவாத தினசரி இதழும், சிரியா நாட்டிலிருந்து இயங்கும் பலஸ்தீனதீவிரவாத அமைப்பின் வானொலியும் அழைப்பு விடுத்துள்ளன.

ஒருபுறம் பலஸ்தீனஇஸ்ரேல் ஒப்பந்தத்தை ஆதரிக்கும் சிரியா மறுபுறம் இந்த ஒப்பந்தத்தை குலைக்கும் வேலைக்கும் தன் நாட்டில் ஊக்குவிப்பதாக இஸ்ரேலிய பிரதமர் குறை கூறியுள்ளனர்.

மேலும் விரைவில் இஸ்லாமிய அரபு நாடானவொன்று இஸ்ரேலை அங்கீகரிக்கும் என திரு. ராபின் நம்பிக்கை தெரிவித்தார். (கே-சி)

### தியாகி திலீபன்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

புலோ சிற. பசுபதி ச. ச. நி. பன்னிருவர் பாலர்பாடம், நாவற்குழி ம. வி. தி.

### தீவகக் கோட்டம்

நல்லூர் கோவில் முன்றல் தீவக வேலணை ப. நோ. கூ. சங்கம், வேலணை மத்தி கலாவித்தி, சரவணை நாகேஸ்வரி வித்தி.

சிரமதானம் மேற்கொள்ளப்படும் இடங்கள் மற்றும் பங்கு பற்றுவோர் விபரங்கள்-

சங்கானை - காரைநகர் ஈஸ்வரி வீதி திருத்துதல், சண்டிலிப்பாய் - ஆனைக்கோட்டை - மகாஜன வளர்மதி, உடுவில் - இணுவில். சந்தைவெட்டி கிணறு துப்புரவு செய்தல், திலீபன் மு. மக்கள்.

### வட மராட்சிக் கோட்டம்

கரவெட்டி - கரண. மத்தி பொ. மயான துப்புரவு செய்தல் - பொதுமக்கள் உடுப்பிட்டி. கம்பர்மலை பண்டித - வீதி புனரமைப்பு - தூபிகள் துப்புரவு - பொது மக்கள்.

பருத்தித்துறை மத்திய சந்தைச் சுற்றாடல் - புலோலி வணிகர் சங்க உறுப்பினர்.

பண்டிதர் குடியிருப்பு, குளம் புனரமைத்தல் - தீவக மக்கள். (க)

### அரசு - புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லைத் தூதரகம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து அரசதரப்புடன் ஐ. நா. தூதுக்குழு பேசவுள்ளதாகவும் அச்செய்தி தெரிவித்துள்ளது.

நோபல்பரிசுபெற்ற நான்கு அறிஞர்களின் சமாதான திட்டத்தை இலங்கை நிராகரித்த பின் இவர்கள் இலங்கை நிலை குறித்து ஐ.நா. சபைக்கு விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (வி)

# வட இந்தியாவில் 87 ஆதிவாசிகள் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

இந்தியாவின் வட மாநிலமான மணிப்பூரில் ஒரு ஆதிவாசி இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பகைமை கொண்ட இன்னொரு ஆதிவாசி இனத்தைச் சேர்ந்த கிராம வாசிகள் மீது தாக்கியதில் 87 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சட்ட விரோதமாக்கப்பட்ட நாகலாந்து தேசிய கவுன்சிலைச் சேர்ந்த கெரில்லாக்கள் ஒரு கிராமத்தினுள் புகுந்து, ஆண்களை வரிசையாக நிறுத்தி வைத்து சுட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நாகாக்களுக்கும், குக்கிகளுக்கும் இடையே நடக்கும் வன்முறைகளில், இதுவே மிக மோசமாக நடந்த வன்முறை சம்பவமாகும். (கே-சி)

# உணவு முத்திரையில் மாற்றம் வருகிறது

பாடசாலை மாணவர்க்கான

(கொழும்பு)

உணவு முத்திரை பெறும் குடும்பங்களை சேர்ந்த பாடசாலை பிள்ளைகளுக்கு பகல் உணவு முத்திரைக்கு பதிலாக 50 ரூபா போசாக்கு உணவு முத்திரை வழங்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அத்தகைய உதவி வேண்டுமென்று கோரிக்கை விடுக்கும் ஏனைய பெற்றோர்களுக்கும் இந்த போசாக்கு முத்திரை வழங்கப்படும்.

ஒரு வயதுக்கும் 5 வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகளின் போசாக்கு நிலைபற்றி ஆய்வு ஒன்றும் நடத்தப்படவுள்ளது. இதன் பின்னர் பொருத்தமான யோசனைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும்.

வறுமை நிவாரண ஆணையாளர் உத்தேச திட்டத்திற்கான ஏற்பாடு செய்யும் வரையில் கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பகல் உணவுமுத்திரைகள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும். (கே-சி)

### கிரிக்கெட்:

## இலங்கை: 3-117

(கொழும்பு)

தென்ஆபிரிக்க - இலங்கை அணிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெறும் 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2ம் நாள் முடிவில் இலங்கை அணி 3 விக்கெட் இழப்பிற்கு 117 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அரவிந்த டி சில்வா 44 ஓட்டங்களுடனும், அருச்சுண ரணதுங்க 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.

முதலில் தென்ஆபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 316 ஓட்டங்களைப் பெற்றது. (சி)

### கொழும்பைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் பாதுகாப்பை முழு அளவில் தயாரிபடுத்திய பின் வடக்கில் பாரிய தாக்குதலை ஆரம்பிக்கக்கூடும் எனவும் அவதானிகள் கூறுகின்றனர்.

இதற்கேற்ப அண்மைக் காலமாக வடக்கில் இராணுவத்தினர் யுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. -சி

### புதிய மாற்றங்களின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் போதும் கடற்படை முகாம்களுக்கும் சென்று கடற்படை அதிகாரிகளை சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடியுள்ளார்.

இவரது இந்த விஜயம் வடபகுதியில் மேற்கொள்ளப்பட இருப்பதாக கூறப்படும் இராணுவ நடவடிக்கைக்கான முன்னோடி விஜயமாக இருக்கலாமெனவும் கருதப்படுகிறது. (ம-கி)

### திலீபன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திகதிவரை பன்னிரண்டு தினங்களுக்கு தமிழ் மக்கள் தியாகி திலீபனை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துவர்.

நல்லூரில் நடைபெற்ற தியாகி திலீபனின் உண்ணாவிரத நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பங்கு பற்றினர்கள். இதேபோன்று நேற்று ஈழத்தின் பல பகுதிகளிலும் தியாகி திலீபன் நினைவு தினம் ஆரம்பமானது வீதிகள் எங்கும் திலீபனின் படங்கள் அலங்கரிக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இன்று 2-ம் நாள் அனுஷ்டிப்பு தொடர்கிறது. (ம - கி)

### 3 பீரங்கிப் படகு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குதல்களை நடத்தினர்.

இப்பீரங்கி தாக்குதல்களால் அலம்பில் பகுதியை சேர்ந்த 3 மீனவர்கள் காயமடைந்தனர்.

மேலும் அலம்பில் கடற்கரையில் வீழ்ந்து வெடித்த பீரங்கி குண்டுகளால் வள்ளங்கள், வலைகள் மற்றும் உபகரணங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டன. (கே-சி)

### புலிகளின் தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கொழும்பு நகரின் பாதுகாப்பு, முப்படைகளையும் உள்ளடக்கிய விசேட படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பின் சகல பகுதிகளும் தினமும் படையினரின் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டுப் பெருமளவு தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனராம். (வி)

### களனிப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் கடத்தப்படுகிறார்கள் என்ற செய்தியே பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் வராமைக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

அகிம்சைப் போராட்டங்களில் இறங்கும் மாணவர்களின் போராட்டத்தை முறியடிப்பதற்கு, சிலர் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்று இப்படியான சம்பவங்கள் பற்றி தமக்கு ஏதும் முறைப்பாடு வரவில்லை என்றும் களனி பல்கலைக்கழக துணைவேந்தர் மாரசிங்க தெரிவித்துள்ளார். (ம-கி)

### பலாலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஊரணி. இவரது தந்தையான பி. கனகராசா (வயது 33), தாய் மனோரஞ்சினி (வயது 26) மற்றும் முருகமூர்த்தி சுசீலா (வயது 36) அவரது மகள் மு. சுந்தர் (வயது 5) சபாரத்தினம் கனகம்மா (வயது 50) ஆகியோர் காயமடைந்தனர்.

உடுவில் கிழக்கில் வீழ்ந்த ஷெல்களினால் சண்முகநாதன் விக்கினேஸ்வரன் (வயது 14) அருளானந்தம் அருட்செல்வி (வயது 15) ஆகியோரும் கன்னாகம் மேற்கில் வீழ்ந்த ஷெல்களினால் கதிர்காமு இராசேஸ்வரி (வயது 30) சின்னத்தம்பி இராசகிளி (வயது 60) வி. இராசசேகரம் (வயது 60) ஆகியோர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்ஷெல் தாக்குதல்களினால் பல வீடுகளும் பலத்த சேதமடைந்தன. (க-சி)

### சுன்னாகம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மா. இராசரத்தினம் (வயது48) என்பவர் காயமடைந்தார். காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆலயத்தில் அண்மையாக உள்ள வீட்டில் விழுந்த ஷெல்லினால் வீடு பலத்த சேதமடைந்தது. (56-157-சு)

இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிட்டெட் விநியோகத்தாரால் யாழ்ப்பாணம், இலங்கை கோவில் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B: